DEPOSITION OF WITNESS.
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. 2, SIVAKASI
Case No. CC.214/2020
**Depositions of PW 1**

| | | | |
|---|---|---|---|
| Name | ராஜா | Caste | |
| Father's name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th Day of August 2025

**19.09.2025**
எதிரி ஆஜர்.
**முதல் விசாரணை**

நான் சிவகாசி, போஸ்காலனியில் குடியிருந்து வருகிறேன். கொத்தனார் வேலை பார்த்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன பால்பாண்டி என் உடன் பிறந்த தம்பி ஆவார். சம்பவ சமயத்தில் என் தம்பி பால்பாண்டி திருச்செந்தூர் முருகன் கோவிலுக்கு மாலை அணிந்திருந்தார். கடந்த 04-01-2020 ஆம் தேதியன்று என் தம்பி பால்பாண்டி இருக்கண்குடி மாரியம்மன் கோவிலுக்கு மணிகண்டன், கனி ஆகியோருடன் பாதயாத்திரையாக சென்றார். அன்று இரவு சுமார் 9.45 மணிக்கு நான் வீட்டிலிருந்தபோது, வரதராஜன் என்பவர் எனக்கு போன் செய்து, நாரணாபுரம் செல்லும் சாலையில் உள்ள செவன்த்டே பள்ளிக்கு அருகில் என் தம்பி பால்பாண்டிக்கு விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார். நான் உடனே சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றேன். அதற்குள் என் தம்பியை ஆட்டோவில் ஏற்றி வந்து எதிரே வந்தார்கள். நானும் அவர்களுடன் சேர்ந்து சிவகாசி பேருந்து நிலையம் அருகே உள்ள சுப்புராஜ் மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு என் தம்பி

பால்பாண்டியை பரிசோதித்துவிட்டு இறந்துவிட்டதாக சொன்னார்கள். எனக்கு தகவல் சொன்ன வரதராஜனிடம் விபத்து எப்படி நடந்தது என்று கேட்டேன். அதற்கு வரதராஜன் என் தம்பி செவன்த்டே பள்ளி அருகே பாதயாத்திரையாக மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்று கொண்டிருந்தபோது, என் தம்பிக்கு பின்னால் அதே திசையில் வந்த எதிரி அந்தோணிகுரூஸ் என்பவர் மது போதையில் இருசக்கர வாகனத்தில் முன்முகப்பு விளக்கு இல்லாமல் பின்னால் இருவரை அமர வைத்துக் கொண்டு வந்து என் தம்பி மீது மோதி, விபத்து ஏற்பட்டது என்று சொன்னார். இறந்துபோன எனது தம்பியின் பிணத்தினை சிவகாசி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். இது சம்மந்தமாக, அன்று இரவே சிவகாசி கிழக்கு காவல் நிலையத்தில் நான் புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனு நான் அளித்ததுதான். புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். சாட்சியால் அளிக்கப்பட்ட **புகார் மனு அ.சா.ஆ.–1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள். நடந்த விவரம் கூறினேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை